J. R. T. S.] GENERAL SERIES. [No. 30.

# THE CATECHISTS' MANUAL.

[Containing plain and searching arguments on what should be the motives and practice of spiritual Instructors, by showing the necessity of the new birth and holiness of life—of a thorough acquaintance with the Bible—of a good general education—of kind generous feelings—consistency of life—and of prayer for the gifts of the Holy Spirit.]

# போதகர் இலக்கணம்.

உபதேசிகள் நடக்கவேண்டிய முறைமையைக் காட்டியது.

எந்தத் தொழிலைச்செய்ய விரும்பினவர்களும் அந்தத் தொழிலைச்செய்து முடிப்பதற்கு ஏற்ற உபயோகங்களைச் சம்பாதித்து விடாமுயற்சியுங் கொண்டிருப்பது போலச் சுவிசேஷ போதகத் தொழிலைக் கையேற்றிருக்கிற உபதேசிகளும் அதற்கு ஏற்ற உபயோகங்களாகிய இலட்சணங்களைக் கொண்டே தங்கள் தொழிலை நிறைவேற்றி முடிப்பது அவர்களுக்குக் கடமையாய் இருக்கின்றது. இப்படி இருக்கச் சிலர் உபதேச உத்தியோகத்தைக் கையேற்றுக்கொண்டு தாங்கள் வேதத்தின்படி நடவாமலும் பிறருடைய ஆத்தும ரட்சிப்புக்காகக் கவலைகொள்ளாமலும் விட்டு லௌகீக இச்சையில் உட்பட்டுத் தங்கள் ஆத்துமாவையும்

2d Ed.] AMERICAN MISSION PRESS, JAFFNA. [5,000
1844.

தங்கள் கையிலே தேவன் ஒப்புக்கொடுத்த பிற
ஆத்துமாக்களையுங் கெடுத்து நரகத்தில் விழு
த்திவிடுகிறார்கள். ஆதலாற் சுவிசேஷ போத
கஞ்செய்கிற உபதேசிகள் இன்னவின்ன இல
ட்சணங்களை உடையவர்களாய் இருக்க வேண்டு
மென்று வேதத்தினாலும் விவேகத்தினாலும்
சில நியாயங்களை எடுத்துக் காட்டுவோம். அ
ப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு
எழுதின முதலாம் நிருபத்து மூன்றாம் அதிகா
ரம். ௧ம். வசனந் தொடங்கி, ௭ம். வசனம்மு
டிய,கண்காணிப்பை விரும்புகிறவன் நல்லவே
லையை விரும்புகிறான். இது மெய்யான வார்த்
தை. ஆகையாற் கண்காணியானவன் குற்றமில்
லாதவனுமாய் ஒரே மனைவியை உடைய பு
ருஷனுமாய்த் தெளிந்த புத்தியுள்ளவனுமாய்
விவேகியுமாய் நல்லொழுக்கமுள்ளவனுமாய்
அந்நியரை உபசாரஞ்செய்கிறவனுமாய்ப்போ
திக்கிறதற்குத் தகுதியானவனுமாய் இருக்க
வேண்டும். அவன் திராட்சஇரசத்திற் பிரியனு
மாய் அடிக்கிறவனுமாய் அவலட்சணமான ஆ
தாயத்தை இச்சிக்கிறவனுமாயிராமற் சண்டை
பண்ணாதவனுமாய்ப் பணத்தின்மேற் பிரியமி
ல்லாதவனுமாய்த் தன் சொந்தக் குடும்பத்தை
நன்றாய் நடத்துகிறவனுமாய்த் தன் பிள்ளைக
ளை எவ்விதத்திலும் யோக்கியமாய்க் கீழ்ப்
படியப்பண்ணிக்கொள்ளுகிறவனுமாய் இருக்
கவேண்டும். ஒருவன் தன் சொந்தக் குடும்பத்
தை நடத்த அறியாதிருந்தாற் பராபரனுடைய
சபையை எப்படி விசாரிப்பான்? மேலும் அவ

ன் இருமாப்பை அடைந்து பசாசு விழுந்தஆக்கினையிலே விழாதபடிக்கு நூதனமான கிறிஸ்தவனாய்இருக்கக் கூடாது. மேலும் அவன் நிந்தனையிலும் பசாசின் கண்ணியிலும் விழாதபடிக்குப் புறம்பானவர்களால் நற்சாட்சியைப் பெற்றவனாயும் இருக்கவேண்டும்.

உபதேசிகள் இந்த வசனங்களிலே நல் இலக்கணமுடையவர்களும் தீயிலக்கணங்களை விட்டவர்களுமாய் இருக்கவேண்டுமென்று விளங்குகிறது. இவ்விலக்கணங்கள் பரிசுத்த ஆவியினால் மறு செனனமடையாதவர்களுக்கு உண்டாயிருக்கக் கூடாமையால்.

கவது. உபதேசிகள் புத்திக்குணமுடையவர்களாய் இருக்கவேண்டுமென்றும்.

உவது. பரிசுத்தமும் விவேகமும் உடையவர்களாய் இருக்கவேண்டுமென்றும்.

ஙவது. அன்புள்ளவர்களும் ஆத்தும ரட்சிப்பில் விருப்புள்ளவர்களுமாய் இருக்கவேண்டுமென்றும்.

சவது. உத்தம நடையுள்ளவர்களாய் இருக்கவேண்டுமென்றும்.

ருவது.ஆவிக்கேற்றவரங்களையுடையவர்களும் அவற்றிற் சிந்தனையுடையவர்களுமாய் இருக்கவேண்டுமென்றும் எடுத்துக் காட்டுவோம்.

முதலாவது.

புத்திக் குணமுடையவர்களாய் இருக்க வேண்டுமென்பது.

சென்ம சுபாபத்தின்படி இருக்கிற மனுஷ

ஸ் தேவ ஆவிக்கேற்ற நினைவு பேச்சுச் செய்
கையைக் கொண்டிருக்க மாட்டான். அதற்கு
விரோதமான மாமிசத்திற்கேற்ற சிந்தனை கிரி
யை இன்னதென்று நிதானிக்கவும் மாட்டான்.
அப்படிப்பட்டவன் தன்னைத் திருத்தவும் பி
றரைத் திருத்தவும் தகுதியுடையவனல்ல. ஒரு
உபதேசி தேவலட்சணங்களை யெடுத்து அத்
தாட்சியுடனே இவனே தேவனென்றும் இவ்
விலட்சணங்களில்லாத மற்றொன்று தெய்வம
ல்ல என்றும் சனங்களுக்கு விளக்கக் காட்ட
வேண்டியது. அவைகளை இவன்தான் அறியா
திருந்தால் மற்றவர்களுக்கு எப்படிப் போதிப்
பான். அவர்கள் இவன் உபதேசிக்கிற தெய்வ
மே தெய்வமென்று எப்படி அங்கீகரிப்பார்
கள். அவர்கள் தாங்கள் முன் நம்பியிருந்த அ
ன்னிய தேவாராதனையையும் விக்கிரகாராதனை
யையும் மற்றும் வீண் வழிபாடுகளையும் எப்
படி விடுவார்கள். மேலும் தாங்கள் போதிக்கி
ற தெய்வமாகிய பிதாக்குமாரன் பரிசுத்த ஆவி
யென்னும் யெகோவாவைப் பற்றிய விசுவாச
த்தில் உறுதியுள்ளவர்களாய் இருக்க வேண்டு
ம். இவைகள் அதில் நிலைகொலைந்து போற
தாகில் சனங்கள் எப்படி நிலைநிற்பார்கள். இ
வர்கள் வேதவசனத்தின்படி சனங்கள் நடக்
கவேண்டிய ஒழுங்குத் திட்டங்களை அவர்களு
க்குப் போதிக்கிறபடி தாங்களும் நடக்கிறவ
ர்களாயிருக்க வேண்டும். அப்படி நடவாம
ல் இவர்கள் போதகம் ஒருவழியாயும் இவர்
கள் நடை வேறொருவழியாயும் இருந்தாற் ச

ணங்கள் இவர்கள் போதகத்தை எப்படி நம்பி
ஏற்றுக்கொள்வார்கள். இவர்கள் சகலரும் இ
ருதய சுத்தமுள்ளவர்களாய் இருக்க வேண்டு
மென்று போதித்து வருகையில் இவர்களு
டைய இருதயம் அசுத்தமுள்ளதாய்க் கோபம்
பகை முதலிய தீக்குணங்களையும் காமவிகா
ரம் பொருளாசை முதலிய துராசாரங்களை
யும் உடையவர்களாயிருந்தால் தாங்கள் இரட்
சண்ணிய மார்க்கத்துக்குப் புறம்பாய் நிற்கிற
துமன்றிச் சனங்களையும் அதற்குப் புறம்பாக்கு
வார்கள். அனேகரை நீதிமார்க்கத்திலே திருப்
புகிறவர்கள் பரமபிதாவின் இராச்சியத்திலே ந
ட்சத்திரங்களைப் போலப் பிரகாசிப்பார்கள் எ
ன்று வேதஞ் சொல்லுகின்றதே. நீங்கள் புது
க்குணமடையாமற் போதகம் மாத்திரம்பண்
ணி வந்தால் அந்தப் பேறு உங்களுக்குக் கிடை
க்குமா? குணப்படாதவன் திவ்விய வசனத்தை
ச் சனங்களுக்குப் போதிப்பது குருடன் விள
க்குப் பிடித்த வண்ணமாய் இருக்குமே அன்றி
ப் போதித்தவனுக்குப் பிரயோசனமாய் இரு
க்க மாட்டாது. மனுஷன் பரிசுத்தமும் நீதி
யும் விசுவாசமும் உள்ளவனாய் நடக்கிறதினாலே
அல்லாமற் போதகம்பண்ணுகிறதினாலே ரட்
சிக்கப்படக் கூடுமோ? மோட்சஞ் சேருகிற வ
ழியிலே தான் நடவாமல் மற்ற பேரை நடக்கு
ம்படி போதிக்கிறவன் கதவைத் திறந்து பிற
ரை உட்புகுத்தித் தான் வெளியே நிற்கிறவன்
போல இருப்பனே அன்றி மற்றப்படியல்ல.
பராபரன் நீதி பரராய் இருக்கையாற் கடைசி

நாளிலே வேத மார்க்கமாய் நடவாத உபதேசி களைப் புறம்பே தள்ளி இவர்கள் போதகத்தி னாலே வேதமார்க்கமாய் நடந்த சனங்களை மோட்சத்திற் சேர்த்துக் கொள்வார். அப் பொழுது இவர்கள் நியாயாதிபதியாகிய யேசு நாதரை நோக்கிக் கருத்தாவே உமது நாமத்தி னாலே நாங்கள் தீர்க்கதரிசனம் உரைத்தோமல் லவோ என்று சொன்னாலும் அவர் அக்கிரமக் காரரே நீங்கள் என்னை விட்டு அகன்று போ ங்கள். நான் உங்களை அறியமாட்டேன் என்று சொல்வார். நீங்கள் குணப்பட்டுப் பரிசுத்தரா காமல் இருந்தால் மற்றவர்களைப் பார்க்க மிகு ந்த நிற்பாக்கியராய் அதிக ஆக்கினைப்படுவீர்க ள் என்பது வேதத்தைத் தெளிவாய்க் கற்ற உங் களுக்குத் தெரிந்திருக்கும். பாவம் பயப்பட த்தக்கதென்று போதிக்கிற நீங்கள் பாவத்தை யே செய்தாற் சனங்கள் பாவத்திற்கு அஞ்சு வார்களா? அவர்கள் பாவத்திற்கும் உங்கள் பா வத்திற்கும் உத்தரவாதிகள் நீங்கள் அல்லவா? யேசுநாதருடைய கிருபை யாவருக்கும் வே ண்டுமென்று போதிக்கிற நீங்கள் அதில் வே ண்டா வெறுப்பாய் நடந்தால் சனங்கள் அ தைத் தேடுவார்களா? நரகவேதனை மகா கடி தென்று போதிக்கிற நீங்கள் அதற்கு அஞ்சா மல் பாவஞ்செய்தால் சனங்கள் நரகத்திற்கு அஞ்சுவார்களா? மோட்சம் மகா இன்பமுள்ள தென்று போதிக்கிற நீங்கள் அதற்கு அஞ்சா மற் பாவஞ்செய்தால் சனங்கள் நரகத்திற்கு அஞ்சுவார்களா? மோட்சம் மகா இன்பமுள்ள

தென்று போதிக்கிற நீங்கள் அதில் வாஞ்சை வையாமல் நடந்தாற் சனங்கள் மோட்சத்தை விரும்பி யேசுநாதரை நேசிப்பார்களா? இப்படி நீங்கள் பழய சுபாபத்தோடே நடந்தால் நீங்களும் உங்கள் கையில் ஒப்புக்கொடுக்கப்பட்ட சனங்களும் ஏகமாய்த் தேவ நீதித் தீர்ப்புக்கு ஏதுவாய் இருப்பீர்கள். ஆகையாற் புதுக்குணமடைவது சனங்களைப் பார்க்க உபதேசிகளுக்கே மிகவுந் தேவை.

இப்படிப் புதுக்குணமடையாதவர்களிற் சிலர் வேத வசனத்தைப் படித்துப் பாடமாக்கிக்கொண்டு புறம்பான தேவாராதனைகளை நடப்பித்துத் தங்களை ஆவிக்கேற்ற புதுக்குணமடைந்தவர்கள் என்றெண்ணி உபதேசி உத்தியோகத்தையும் பெற்றுக்கொண்டு ஞான ஐசுபரியங்கள் ஒன்றும் இல்லாதவர்களாய் நடந்துவருகிறார்கள். இவர்களையே நிற்பாக்கியரென்றும் பரிதபிக்கப்படத்தக்கவர்களென்றும் தரித்திரரென்றும் குருடரென்றும் நிருவாணிகளென்றும் அசுத்தரென்றும் சொல்ல வேண்டும். இவர்கள் பிறருடைய பாவங்களை அவர்களுக்கு அறிவித்து அவர்கள் தங்கள் பாவங்களை விட்டுத் திரும்பவும் தங்கள் பாவத்துக்கு ஒரு இடேற்றத்தைக் கிறிஸ்து வழியாய் அடையவும் வேண்டுமென்று போதித்து அவர்களுக்குச் சீவ ஆகாரத்தைக் கொடுத்து வந்தாலும் தாங்கள் அந்த ஆகாரங்களிற் புசியாமற்பட்டினியாயிருக்கிறார்கள். இவர்கள் பிறருக்கு வேதவசனமென்கிற கண்ணாடியைநீட்டி அவர்களுக்கு உள்ளி

ருக்கிற பாவங்களை அவர்களுக்குக் காட்டியும்
அந்தக் கண்ணாடியைக் கொண்டு தங்கள் பாவ
ங்களைப் பாராமல்அந்தக் கண்ணாடியின் பிற்பக்
கத்தைப் பார்த்து மயங்குகிறவர்களாயிருக்கி
றார்கள். இவர்கள் தங்களைக் கிறிஸ்துவுக்கு ஒப்
புக்கொடுத்துப் புதுக்குணமடைய முன்னே
கிறிஸ்துமார்க்கத்தை உபதேசிக்கத் தலைப்பட்
டுக்கொண்டு தாங்கள் அறியாதபராபரனைச் ச
னங்கள் அறியவும் தாங்கள்செய்யாத பணிகளை
ச் சனங்கள் செய்யவும் தாங்கள் விசுவாசியாத
சுவிசேஷத்தைச் சனங்கள்விசுவாசிக்கவும் வே
ண்டுமென்று போதிக்கிறார்கள். அது நாணை
ய வித்தியாசமறியாத குழந்தைகள் காசு மா
ற்றக் கடைக்குப் போனது போலவே இரு
க்கின்றது. இவர்கள் தங்களைப் போதகச்
சமர்த்தரென்றும் உண்மையுள்ளவர்களென்
றுங் காண்பித்து வேதந் தேவ வசனமென்று
வாய்ப் பிறப்பாய்ச் சொல்லிக்கொண்டாலும்
தேவனுக்கு மகிமையும் மனிதருக்கு இரட்சி
ப்பும் உண்டாக வேண்டுமென்று மனதார வி
ருப்பில்லாதவர்களாய் இருக்கையால் அவர்கள்
திருச்சபைக்கு மிகுந்த கேடுண்டாக்க ஏதுவா
யிருக்கிறார்கள். பிரியமானவர்களே நீங்கள் மா
மிசத்திற்கேற்ற சிந்தையுள்ளவர்களாய் இருந்
தாற் பத்திவயிராக்கியத்தை அடைந்து பாவி
கள் பராபரன் அண்டை மனந்திரும்பிக் குண
ப்படும்படி எப்படி அழைப்பீர்கள். பாவம்
பராபரனுக்கு விரோதமென்றும் பரிசுத்தம்
அவருக்குப் பிரியமென்றும் உணராமற் சேர்

றை நாடுகிற பன்றியைப் போல அசுத்தத்தை
நாடுகிற நீங்கள் பிறரை அக்கிரமத்தில் நின்று
கிரமத்திற்கு இழுக்கிறவகை என்ன! அவர்கள்
தங்கள் கிரமங்களையுந் தோஷங்களையும் உணர்
ந்து கர்த்தாவண்டை திரும்பும்படி நீங்கள்
செய்த பிரசங்கங்களும் செபங்களும் உங்க
ள் ஒழுக்கத் தவறுகளினாலே வீணாயிருக்குமே.

இவ்வுலகத்திலுள்ள தீய வழக்கங்களை வெறு
ப்பிப்பதற்கு ஏதுவான திவ்விய வசனத்தை உ
ணராதவர்களாயும் வருங் கேடுகளையும் நித்
பாக்கியங்களையும் சிந்தியாதவர்களாயும் அ
மார்க்கத்திலே நடக்கிற நீங்கள் மறுபேரைச் ச
ன்மார்க்கத்துக்கு எப்படித்திருப்பலாம். லௌ
கீக இச்சைகொண்டு வீம்பாய் நடக்கிற நீங்க
ள் தேவசபையிலே தன் மாதிரியைக் காட்டி
யூதாஸ்காரியோத்தைப் போல அவகடஞ்செய்
கிறவர்களாய் உபதேசிகளென்கிற நாமத்தைச்
சூட்டிச் சபையிலே தீமையை நாட்டிச் சனங்
களுக்கு இரங்காமலும் அவர்களுடைய ஆத்து
ம நட்டத்தைக் கண்டு கலங்காமலும் இருப்ப
தினால் நீங்கள் பசாசின் பாரிசமாய் நின்று கிறி
ஸ்துநாதரை மறுபடி சிலுவையில் அறைகிறவ
ர்களாயிருக்கிறீர்கள். நீங்கள் உங்களைக்கிறிஸ்து
வின் பணிவிடைகாரரென்று சொல்லியும் அ
வருக்கு வெறுப்பானவர்களாயும் பகைஞர்க
ளாயும் இருக்கிறதே அன்றி அவராலே தெரிந்
து கொள்ளப்பட்டவர்களல்ல. உங்கள் சத்துரு
த்தனம் அவருக்குப் புறம்பான சத்துருக்கள்
செய்யும் நட்டத்தைப் பார்க்க அதிக நட்டத்

தை உண்டாக்குகிறது. உங்கள் நடை உங்கள்
பிரசங்கங்களை அவமாக்குகிறது மாத்திரமல்ல
உங்களுக்குச் சகோதரராய் எண்ணப்பட்ட கி
றிஸ்தவர்களுக்கும் அவமரியாதை உண்டாக்
குகிறது. கிறிஸ்துநாதருடைய நாமத்துக்கும்
மகிமைத் தாழ்ச்சியுண்டாக்குகிறது.

இப்படி இருக்கையால் உங்கள் இருதயங்க
ளையும் நடைகளையும் உங்கள் விசுவாசத்தையு
ம் குணங்களையும் சோதித்துப் பாருங்கள். அ
ப்படியே பார்த்து உங்களிடத்திலே வேதத்து
க்கு விரோதமாய்க் காண்கிற தவறுகள் யாவற்
றையும் வேரோடே களைந்து உங்களுக்குத்தா
னே முதற் போதகம்பண்ணிச் சுத்தபத்தியுள்
ளவர்களாகுங்கள். உங்கள் பாவங்களை உங்கள்
உள்ளங்களில் ஒளித்து வைத்தால் அவைகளையு
ம் பராபரன் அறிந்து உங்கள் விண்ணப்பங்
களைக் கேட்கமாட்டார். ஆகையால் நீங்கள்
முதலாவது பராபரனோடே ஒப்புரவாகுங்க
ள். பின்பு அவரிடத்தில் விண்ணப்பம்பண்ணி
த் தெய்வபத்தியையும் தேவ சமாதானத்தை
யும் பெற்றுக்கொள்ளுங்கள். துன்மார்க்கனு
னே நீ நம்முடைய பிரமாணங்களைச் சொல்லவு
ம் நமதுஉடன்படிக்கையை உன்வாயினாற் பே
சவும் உனக்கு என்ன நியாயம் இருக்கின்றது.
கடிந்துகொள்ளுதலை நீ பகைத்து நம்முடைய
வார்த்தைகளை நமக்குப் பின்னாக எறிந்துபோ
டுகிறாய் என்று சொல்லியிருக்கிற திவ்விய வாக்
கியத்தைச் சிந்தித்துச் சிந்தித்துக் கண்ணீர் வி
ட்டுக்கொண்டு உங்கள் இருதயங்களைப் புதிதாக்

கும்படிக்கு மென்மேலும் பராபரன் கிருபை செய்யத்தக்கதாய்ப் பயபத்தியோடே வேண்டுதல் பண்ணுங்கள்.

இரண்டாவது.

உபதேசிகளாகிய நீங்கள் புதுக்குணமுடையவர்களாய் இருக்கிறது மாத்திரமல்ல விவேகமும் கல்வியும் உடையவர்களாயிருக்கவும் வேண்டும். தேவ வசனம் சாதாரணமாய் விளங்கத்தக்கதுதான். ஆயினும் அனேக வசனங்கள் உவமையாயும் உட்கருத்துள்ளதாயும் பலபொருள் தரத்தக்கதாயும் இருக்கின்றது. ஆகையால் அனேகர் வேதப்பொருள்களைக் குறித்துச் சந்தேகப்பட்டு அதை வினவி அறியப் பிரியமுள்ளவர்களாய் இருப்பார்கள். சிலர் மிகுந்த கபடமும் முருட்டுக்குணமும் உள்ளவர்களாய் இருக்கிறபடியால் நீங்கள் அவர்களுக்குப் புத்தி சொல்லுகிறபொழுது வேதத்தின் கருத்தை மாற்றி உங்களோடே எதிர்த்து வீண் தருக்கஞ் செய்வார்கள். அவைகளையெல்லாம் பொய்யென்று நீங்கள் திருட்டாந்தமாய்ச் சாண்பித்தாலுந் தங்கள் வார்த்தைகளை உறுதியாக்கும்படிக்குத் திரும்பவும் அவர்கள் பலவிதமான உபாயங்களைத் தேடுவார்கள். சிலர் நீங்கள் சொல்லுகிற பொருள்களை அறியாமல் வீண் வார்த்தைகளைப் பேசுகிறவர்களாய் இருப்பார்கள். சிலர் அவபத்தியுள்ளவர்களாயுஞ் சுவாலைவிட்டு எரிகிற அக்கினிபோலக் கோபம்மண்டினவர்களாயும் இருப்பார்கள். நீங்கள் போதனையினாலே எவ்வளவாக அவர்கள்வாயை அடக்கினாலும்

அவர்கள் புத்தியைத் தெளிவாக்குவது மிகவும்
அரிதாயிருக்கும். ஆகையால் நீங்கள் பாம்பை
ப்போல விவுவுள்ளவர்களும் புறாவைப்போற்
கபடமற்றவர்களுமாக இருந்து அவர்களுடை
ய வம்பு வார்த்தைகளை நீக்கிச் சுவிசேஷவசன
த்தில் அவர்கள் மனம் பதியப்பண்ணவேண்டி
யவர்களாயிருக்கிறீர்கள். இதுவல்லாமல் அரு
ம்பொருளாயிருக்கிற வசனங்களின் பொருளை
விளங்கும்படி அனேகர் உங்களிடத்தில் வினவு
வார்கள். அவர்களுக்கு மனந்தெளியப் பொரு
ள் கூறுவது உங்களுக்குத் தேவையாய் இருப்
பதால் நீங்கள் நல்ல கல்வி கேள்வியுடையவர்
களாயிருக்கவேண்டும். இன்னும் தற்கம் பண்
ணுகிறவர்கள் உங்களுடைய விவேகத்தாழ்ச்சி
யைக் கண்டால் அதிக தற்கம்பண்ண முயற்சி
கொள்வார்கள். அவர்களுடைய தற்கத்தை
அடக்கத்தக்க விவேகமுங் கல்வியு முள்ளவர்க
ளாய் நீங்கள் இருந்தால் தற்கக்காரர் அமைந்
து உங்கள் போதகத்துக்குச் செவிகொடுப்பா
ர்கள். அப்போஸ்தலனாகிய பவுல் உபதேசி
உத்தியோகஞ்செய்வது அதிக பிரயாசமெனக்
கண்டிருந்தான் அதைச் செய்யத்தக்கவன் ஆ
ரென்று சொன்னான்.

ஆகையால் நீங்கள் வேதத்தை நன்றாய் ஆரா
ய்ந்து கற்றுத் தேவபத்தியுள்ளவர்களாய் நடந்
து குணப்பட்டவர்களாய்ப் போதகர் இலட்
சணங்களை எல்லாம் சரிவரக் கொண்டிருக்கிறவ
ர்களாய் இருக்கவேண்டும். இது காரியத்தைக்
கருதாமல் அது எவரும் பார்க்கத்தக்க உத்தி

யோகந்தான்என்று அற்பமாயெண்ணிக்கொண்டு சோம்பத்காரரும் கவலையற்றவர்களுமாய் இருந்தீர்களேயானால் நீங்கள் கைக்கொண்ட உத்தியோகத்தைச் செய்து முடிக்கமாட்டீர்கள். இப்படி நீங்கள் உங்கள் வேலையில் அசதியாய் இருந்தீர்களேயாகில் உலகத்தார் உங்களை நிந்திப்பதும் அன்றி நீங்கள் போதிக்கிற தேவவசனத்தையும் கூட நிந்தித்து அசட்டைபண்ணித் தங்கள்ஆத்துமாக்களைக் கெடுத்துக் கொள்வார்கள். அப்பொழுது உங்கள் பிரயாசம் அபத்தமாய் யாதொரு பிரயோசனமுமற்றிருக்குமென்பதை அறிந்துகொள்வீர்களாக.

சில உபதேசிகள் பிற ஆத்துமங்கள் நரகத்தில் அனுபவிக்கப்போகிற வேதனைக்குப் பரிதாபமற்றவர்களாயும் அசமந்தராயும் போதிக்கிறதினால் சனங்கள் தங்கள் நிர்ப்பாக்கியத்தை உணரமாட்டாமற் போகிறார்கள்: அப்படிப்போதிக்கிறவர்கள் அவர்களுடைய ஆத்துமங்களைக் கெடுக்கிறதுமன்றித் தங்கள் முயற்சித் தொழிலையும் அவமாக்குகிறார்கள். ஆகையால் உபதேசிகள் தங்கள் தொண்டு மிகவும் விசேஷமுடைத்தெனச் சனங்களுக்கு உணரத்தக்கதாய்த் தேவவசனத்தை நன்றாய்க் கற்றுத் தங்கள் தொழிலில் மிகுந்த சாக்கிரதையாய் இருக்கவேணும். மேலுஞ் சிலர் நாடோறும் வேதத்தை வாசித்தும் அதைச் சிந்திக்கிறதில்லை. அதினால் வேதவசனத்தை நல்லாய் அறியாமல் அமார்க்கங்களை உபதேசிக்கிறார்கள். இவர்கள் வேதத்துக்குந் தங்களுக்கும் நிந்தையையு

ம் சனங்களுக்கு நட்டத்தையும் உண்டாக்குகி றார்கள். ஆகையால் வேதவசனத்தை வாசிக் கும் பொழுதெல்லாம் அதில் அதிக சிந்தனை வைத்து மற்ற வாக்கியங்களுடனே ஒத்துணர்ந் து அதின் நிச்சயப்பொருளைக் கண்டவர்களா ய் இருக்கவேண்டும்.

வேறு சிலர் பரிசுத்தஆவியினால் அன்றி சன ங்கள் குணப்படும்படி தாங்கள் ஒன்றுஞ் செய் யக்கூடாதென்று சோம்பலாய் இருக்கிறார்கள். இவர்கள் பரிசுத்த ஆவியானவர் தங்களுக்கும் சனங்களுக்கும் கொடுக்கப்படவேண்டுமென் று தேடாமற் காலத்தை வீண் போக்கி வருகி றார்கள். இவர்கள் சருவமும் விதியின்படி ந டக்கும் என்று மூயற்சியற்றிருக்கிற அஞ்ஞா னிகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். யாவரும் பரிசுத்த ஆவியின் சகாயத்தினாலே தேவ வசன ங்களை அறியவேண்டுமென்றது மெய்தான். ஆகிலும் அந்த உதவியைப் பெற்றுக்கொள்ளு ம்படிக்கு வகை தேடவேண்டும் என்று பராப ரன் கட்டளையிட்டிருக்க அதில் அசட்டையாய் இருந்து பரிசுத்த ஆவியை அடையலாமா? ப ராபரன் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத் தும்படி வேதத்தைக் கொடுத்திருக்க அதை அறியப்பிரயாசப்படாதவர்களுக்கு அவர் தம து சித்தத்தைக் காண்பிப்பார். இதை எண் ணாமல் தேவ ஆவியின் மேல் மாத்திரம் காரிய த்தைப் பொறுப்பித்துக்கொள்வது மிகுந்த புத்தியீனமும் பாவமுமாய் இருக்கும். ஆவியி ன்றிய வளர்ச்சியைப் போல வளர்ந்து கர்த்தாவுக்

குப் பண்செய்யுங்களென்று வேதஞ் சொல்லு
கிறபடி நீங்கள் வேதப்பொருளைக் கற்பதிலும்
ஆவியை அடைய வகைபார்க்கிறதிலும் சாக்கி
ரதையாய் இருந்து பராபரனை நோக்கி விண்
ணப்பஞ்செய்து தேவ வசனத்தைச் சனங்களு
க்கு முயற்சியாய்ப் போதிப்பீர்களாக. அதிலு
ல் உள்ளவன் எவனுக்குங் கொடுக்கப்படும். இ
ல்லாதவனிடத்தில் உள்ளதும் எடுக்கப்படும்
என்கிற வாக்கியம் நிறைவேறுமென்பதை அறி
ந்துகொள்வீர்களாக.

மேலும் கிறிஸ்துவின் சத்துரு மிகுந்த கப
டமுள்ளதாகையால் அவனுடைய புத்திரரும்
அவனைப்போல லௌகீக காரியத்தில் மிகவும்
கபடமும் தந்திரமும் விவேகமும் உள்ளவர்க
ளாயிருப்பார்கள். அவர்களை மேற்கொள்ள
வேதாப்பியாசம் முதலிய பலவித கலைப்பயிற்
ச்சியுள்ளவர்களாய் இருக்கவேண்டும். அதனு
ல் பசாசின்மார்க்கத்தார் கட்டிக்கொண்டபொ
ய்ப் போதகம் இன்னதென்றும் அவர்கள் ப
ண்ணுகிற தர்க்கம் இன்னவிதமென்றும் அதிலு
ள்ள மாறுபாடு இன்னதென்றும் அறிந்து அவ
ர்களுக்கு ஏற்ற மறுமொழி சொல்லலாகும். அ
துவன்றியும் கற்றோர் வாய்ச்சொல் சபைக்கி
ன்பம் மற்றோர் வசனம் சபைக்குத் துன்பம்.
அதனாலே கேட்போருடைய மனதில் பதிவது
போலக் கல்லாதவர் சொல் பதியாது. பலகலை
விற்பன்னமில்லாத சிலர் உபதேச தொழிலில்
ஏற்பட்டிருக்கிறதினால் அவர்கள் போதிக்குமி
டத்தில் தர்க்கவாதிகளுடைய தர்க்கத்தில் அகப்

பட்டுத் தங்களுக்கும் வேதத்துக்கும் நிந்தனையை உண்டாக்கிக் கொள்ளுகிறார்கள். உபதேசித்தொழிலில் மனிதருடைய ஆத்தும லாபத்துக்கேற்றதும் தேவமகிமைப் பிரஸ்தாபத்துக்கு வேண்டியதுமாயிருக்கையால் அந்த உத்தியோகத்தைப் புத்தியும் வித்தையும் பத்தியும் விவேகமும் பூகமுமுள்ளவர்கள் அடைகிறதேயன்றி மற்றவர்கள் பெற்றுக்கொள்வது தகுதியல்ல. ஆகையால் தேவ கிருபையையும் பரிசுத்த ஆவியின் வரங்களையும் சுகிர்த வித்தியாப்பியாசத்தையும் அடைந்துகொள்ளப் பிரயாசப்படுவீர்களாக.

## மூன்றாவது.

உபதேசிகள் பிறரிடத்தில் அன்புள்ளவர்களும் அவர்களுடைய ஆத்தும இரட்சிப்பை விரும்புகிறவர்களுமாயிருக்க வேண்டுமென்பது. பிறரிடத்தில் அன்பு கூராதவர்களாயுந் தமக்கும் பிறர்க்கும் ஆத்தும இரட்சிப்பை வேண்டுமென்று விரும்பாதவர்களாயும் இருக்கிற அனேகர் உபதேசி உத்தியோகத்தைத் தரித்துக்கொள்ளுகிறார்கள். இவர்கள் அந்த வேலையில் ஏற்பட்டால் தங்களுக்கு அதிக பத்தியையுங் கனத்தையும் பொருளையும் பெற்றுக்கொள்ளலாமென்கிற வாஞ்சையினாலேயன்றித் தங்கள் ஆத்துமாவுக்கும் சனங்களுடைய ஆத்துமாவுக்கும் இரட்சிப்பு வருமென்கிற வாஞ்சையினாலே யல்ல. இவர்கள் தேவ சமுகத்திற் குற்றவாளிகளாயும் தேவ தண்டனை அடைய

ஏதுவானவர்களாயும் இருக்கிறார்கள். இவர்களுடைய போதனை பிறருடைய குணப்படுதலுக்குக் காரணமாய் இருந்தாலும் அது இவர்களுக்கு நட்டமாகவே இருக்கும். ஆதலால் பிரிய சகோதரரே நீங்கள் உங்கள் போதகத்தைப் பலிக்கவொட்டாத சோம்பல் இலச்சையான ஆதாயம் பொருளாசை முதலிய பாவங்களை விட்டுத் தேவமகிமைக்கென்றே சேவனஞ்செய்து உங்கள் இரட்சகராகிய இயேசுநாதருக்குப் புகழும் அவருடைய திவ்விய இரத்தத்தினாலே சம்பாதிக்கப்பட்ட சபைக்குக் கனமும் சகலருடைய ஆத்துமாக்களுக்கு இரட்சிப்பும் உங்களுக்குத் மேலான சபையாரிடத்தில் பரிசுத்த ஒழுக்கமும் உண்டாகும்படி விரும்பி மனம் வாக்குக் காயம் ஒத்து நீங்கள் கைக்கொண்ட தேவ தொண்டைச் செய்வீர்களாக. அப்படியே உங்கள் இரட்சகராகிய இயேசுநாதரும் அவருடைய சீஷராகிய அப்போஸ்தலருஞ் செய்தார்கள். கிறிஸ்துநாதர் மனிதருடைய இரட்சிப்புக்கென்றே பரலோக பரமானந்தத்தையும் சகல பரிசுத்த தேவதூதர்களுடைய துதியையும் பிதாவாகிய பராபரனிடத்தில் தமக்கு உண்டாயிருந்த மகிமையையும் விட்டுப் பூலோகத்திற்கு வந்தார். அவர் பூலோகத்திலிருக்கையில் மனிதருடைய ஆத்தும இரட்சிப்பையுந் தேவ மகிமைப் பிரஸ்தாபத்தையும் சம்பாதிக்க விரும்பி நடந்ததேயன்றித் தமக்கு மகிமையாவது மேன்மையாவது பேராவது கீர்த்தியாவது வேண்டுமென்று விரும்பி நடந்த

வரல்லை. அப்படியே நடக்கவேண்டுமென்று
தமது சீஷருக்கும் இலவிசமாய்ப் பெற்றுக்
கொண்டீர்கள். ஆகையால் இலவிசமாய்க்
கொடுங்கள் என்றும் உலகத்திலே உங்களுக்குப்
பொக்கிஷத்தை உண்டாக்கி வையாதிருங்கள்
உங்கள் பொக்கிஷமெங்கேயோ அங்கே உங்க
ள் இருதயமும் இருக்கும் என்றும் கவலைப் ப
டாதிருங்களென்றும் போதித்தார். அதையே
சீஷருங் கைக்கொண்டு ஆத்தும இரட்சிப்புக்
காகவே கவலையுள்ளவர்களாய் நடந்து போதித்
து வந்தார்கள். அதினாலே வயிராக்கியமுள்ள
யூதச் சனங்களில் இருந்தும் மற்ற அன்னிய
சாதியில் இருந்தும் அனேகர் கிறிஸ்துமார்க்கத்
துக்கு மனந்திரும்பிக் கிறிஸ்தவர்களானார்கள்.
அந்த மூலாதாரத்திலிருந்தே நமக்குச் சுவிசே
ஷம் நிலைப்பட்டது. அதிலிருந்தே கிறிஸ்து
வின் சபை விருத்தியாயிற்று. அது காரணமா
கவே நீங்களும் இரட்சிப்பின் வழியிலே சேர்
ந்தீர்கள். காரியம்இப்படி இருக்கையால் நீங்க
ளும் கிறிஸ்துநாதரும் அவருடைய சீஷரும் ந
டந்த முறைமையையும் அவர்கள் போதித்து
வந்த விதத்தையும் அவர் கொண்டிருந்த குண
த்தையும் நீங்களுங் கைக்கொண்டு நடந்தீர்க
ளாகில் கிறிஸ்துமார்க்கம் எத்தனை சடுதியிற் ப
ரம்பும். எத்தனை கோடி ஆத்துமாக்கள் உங்
கள் பொருட்டாய் இரட்சிக்கப்படுவார்கள். நீ
ங்கள் செய்த ஏதுக்களும் முயற்சிகளுங் கார
ணமாய்க் குணப்பட்டு இரட்சிப்படைந்த ஒவ்
வொரு ஆத்துமாக்களும் மோட்சத்தில் உங்க

ளுக்குக் கிரீடமாய்இருக்குமென்கிறதை அறியீர்களோ? சுவிசேஷத்தைப் போதிக்கிறவர்களுடைய காலங்கள் எத்தனை அந்தமுள்ளதென்று வேதஞ் சொல்லுகிறதே. நீங்கள் ஏற்பட்ட உத்தியோகம் மகா உன்னிதமானவருடைய தொண்டென்றும் அது மகா உத்தமமானதென்றும் அறிந்து இருளிலே பிரகாசிக்கிற சுடர்களைப்போல் இருங்கள் என்று புத்திசொல்லுகிறோம்.

## நாலாவது.

### உத்தமநடையுள்ளவர்களாயிருக்கவேண்டுமென்பது.

உபதேசிகளாகிய நீங்கள் உங்கள் நடை உத்தமமாய் இருக்கும்படி நாளுக்கு நாள் உங்களைச் சோதித்து உங்களைப் பேணிக்கொள்ளவேணும். தேவகட்டளையைக் கைக்கொள்ளும்படி மறுபேருக்குப் போதிக்கிற நீங்கள் அவைகளை மீறி நடந்தாற் சனங்கள் அதை எப்படிக் கைக்கொள்வார்கள். பாவந் தேவனுக்கடாததென்றும் அவர் பாவிகளைத் தண்டிப்பாரென்றும் போதிக்கிற நீங்கள் அதற்குப் பயப்படாமல் நடந்தாற் சனங்கள் எப்படிப் பயப்படுவார்கள். நீங்கள் போதிக்கிற போதகத்துக்கு விரோதமாக நீங்கள்தானே நடந்தாற் சனங்கள் உங்களைக் குறித்துச் சந்தேகப்படுவார்களே அப்பொழுது உங்கள் உபதேசத்தினாற் பிரயோசனம் என்ன. இப்படி அப்போஸ்தலனாகிய பவுல் பிறருக்குப் போதிக்கிற நீ உனக்குத்தானே போதியாமல் இருக்கலாமா? களவுசெய்ய வேண்டாமென்கிற நீ களவு செய்யலாமா?

விபசாரம் பண்ணவேண்டாமென்கிற நீ விப சாரம் பண்ணலாமா? விக்கிரகங்களை அருவரு க்கிற நீ பரிசுத்தமானவைகளைக் கொள்ளையிட லாமா? வேத எழுத்தைக் குறித்துப் பெருமை பாராட்டுகிற நீ வேத எழுத்தை மீறி நடந்து பராபரனைக் கனயீனம் பண்ணலாமா? என்கி றார். நீங்கள் எவ்வளவாய்ப் பிரயாசப்பட்டு வாய்ச்சாலமாய்ப் பிரசங்கித்தாலும் நீங்கள் தேவபத்தியும் உண்மையும் இல்லாதவர்களாய் இருந்தால் உங்கள் செய்கையெல்லாம் வீணாய்ப் போம். ஆகையால் உங்கள் நடையைக் குறி த்து எச்சரிக்கையாய் இருங்கள். உங்களிடத்தி ல் அசுத்தை அவிசுவாசம் தற்சினேகம் முதலிய பாவங்கள் வெளிப்படாதிருந்தாலும் அவைகள் இருதயத்திலே இருப்பதினால் மறுபடியுந் த காத இச்சை எழும்பவும் நிலை தளம்பவும் தே வபத்தி குறைபவும் அன்பு நீக்கவும் ஏது உண் டென்பதற்குச் சந்தேகமில்லை. நீங்கள் எல் லாரையும் போலப் பாவச் சுபாவமுள்ளவர்க ளாணதினால் பசாசினால் பாவஞ்செய்ய ஏவப் படுகிறீர்கள். மலையின்மேல் ஏற்றின விளக்கை யாவரும் பார்க்கிறதுபோல உலகத்தார் யா வரும் உங்களையே பார்க்கிறார்கள். ஆகையால் நீங்கள் நன் நடையினின்று வழுவாதபடி எச்ச ரிக்கையாய் இருப்பீர்களாக.

மேலும் அறிவீனன் ஒரு குற்றஞ் செய்தால் யாவரும் பொறுத்துக்கொள்வார்கள். அறி வாளி செய்யுங் குற்றத்தைப் பெரிய பாவமெ ன்று எங்குந் தூற்றுவார்கள். சனங்களைப்பா

ர்க்க உபதேசிகள் அறிவாளிகளும் தேவ தொண்டருமாய்இருக்கையால் அவர்கள் செய்கிற சிறிய குற்றத்தையும் பெரிய அக்கிரமம் என்று யாவரும் சொல்லலாகும். ஆதலால் உங்கள் பாவத்தைக் கண்ட சனங்கள் வேதத்தையும் வெறுப்பார்கள். முற்காலத்திலே ஏலியின் மக்களுடைய அக்கிரமங்களைக் கண்ட இஸ்ரவேற் சபையார் தாங்கள் செலுத்தவேண்டிய பலி காணிக்கைகளையும் விசுவாசிக்கவேண்டிய வேதப்பிரமாணங்களையும் அசட்டைபண்ணிக் கெட்டுப்போனார்கள். அதுபோல் உங்கள் துன்நடையைக்கண்டு சபையுங் கெட்டுப்போக ஏதுவாகும். அந்தப் பிரகாரம் நீங்கள் உங்கள் துன் நடையினாலே உங்களையும் உங்கள் சபையையும் சனங்களையுங் கெடுத்துக்கொள்ளாமல் உடன்படிக்கையின் பெட்டியைச் சுமந்து முன்செல்லுகிற ஆசாரியரைப்போல வேத ஒழுக்கங்களை நீங்களே கைக்கொண்டு சனங்களையும் அந்த ஒழுக்கத்திலே நடத்தத் தேண்டியுங்கள்.

இன்னும் பொருளாசையைக் கொண்டிருக்கிற உபதேசிகள் தங்கள் போதகத்தையும் வீணாக்கித் தங்கள் சனங்களையுங் கெடுக்கிறார்கள். பொருளாசையானது பொய் கொலை களவு முதலிய பெரும்பாவங்களுக்கு வேராய்இருக்கிறதுமன்றித் தன்னை உடையவனுடைய சனிசத்தையுங் கெடுக்கிறது. அப்படிப்பட்ட பொருளின்மேல் நீங்கள் இச்சைவைத்தவர்களாய் இருந்தால் உலக இச்சையை வெறுத்தவர்களெ

ன்று சனங்களுங்களை மதிப்பார்களோ? உலகத்
தை வெறுத்துவிடுங்களென்று நீங்கள் பண்ணு
கிற போதகம் அவமாய்ப் போகாதோ? இப்ப
டியிருக்கையால் உங்களையுஞ் சனங்களையுங் கெ
டுக்க ஏதுவான பொருளாசை உங்களைச் சே
ராதபடிக்கு மிகவும் எச்சரிக்கையாய் இருந்து
புத்திசொல்வீர்களாக.

ஐந்தாவது.

உபதேசிகள் ஆவிக்கு ஏற்ற வரங்களை அடை
ந்தவர்களும் அவைகளைக் குறித்துச் சிந்திக்கிற
வர்களுமாயிருக்கவேண்டும். இதற்கு நாள்தோ
றும் வேதவசனத்தை வாசித்துச் செபம்பண்
ணிச் சனங்களுக்கு உபதேசிக்கப்போறதைத்
தங்கள் மனதிற் கவனித்து அதற்கேற்ற குண
மும் விருப்பமும் நடையுந் தங்களிடத்தில் உண்
டோ என்று கவனித்து வரவேண்டும். அப்
பொழுது உங்கள் போதகம் உங்களுக்குஞ் ச
னங்களுக்கும் பிரயோசனமாய் முடியும். அல்
லாமல் உங்கள் போதகம் பலிக்குமென்கிற ந
ம்பிக்கையோடேயும் உங்கள் செபங் கேட்க
ப்படுமென்கிற நம்பிக்கையோடேயும் செபத்
தியானமாய்ச் சனங்களுக்குப்போதிக்கவேணு
ம். அந்த விருப்பத்தைக் கைவிடாதவர்களாய்
எப்பொழுதுங் கைக்கொண்டு நடக்கவேண்டு
ம். மனிதர் தங்கள் மனதில் எதை இச்சிக்கிறார்
களோ அதையே எப்போதும் பேசுவார்கள்.
அதுபோல நீங்களும் ஆவிக்கு ஏற்ற குணங்க
ளிலும் ஆத்தும இரட்சிப்பிலும் விருப்புள்ள

வர்களாய் இருந்தால் அவைகளே உங்கள் சிந்த
னையும் பேச்சுமாயிருக்கும். அப்படி இல்லா
திருக்க நீங்கள் தேவகாரியங்களை எடுத்துப்
பேசினும் உங்களுக்கு ஒரு நன்மையுங் காண
மாட்டாது. ஆவிக்கு உரிய பொருள்களினாலே
உங்கள் இருதயம் அலங்கரிக்கப்பட்டிராவிட்
டால் உங்கள் பிரசங்கமும் வெறுமையாய் இரு
க்கும். அதைக்கேட்கிறவர்களும் வெறுமையா
கவே போவார்கள். ஆகையால் நீங்கள் மேற்
சொல்லிய துராசாரங்களுக்கு இடங்கொடாம
ற் குறித்த போதக இலட்சணங்களை எல்லாங்
கொண்டிருக்கப் பராபரன் கிருபைசெய்யவே
ண்டுமென்கிற அவாவுடனே ஏனோக்கைப்போ
லத் தேவனுடனே ஐக்கமாய் நடந்து செபத்
திலும் விசுவாசத்திலும் உறுதியுள்ளவர்களாய்
இருங்கள். அப்பொழுது மனிதருடைய ஆத்
துமாக்களைப் பாவச்சேற்றிலிருந்து எடுத்துத்
தேவகுமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவின் இரத்
தத்திற் கழுவி உங்கள் இரட்சகரிடத்துக்குக்
கொண்டுபோய்ச் சேர்க்கத் தகுதியுள்ளவர்க
ளாவீர்கள். பிரியமானவர்களே நீங்கள் புத்திக்
குணமும் விவேகமும் பரிசுத்தமும் உடையவ
ர்களாய் ஆவிக்கு ஏற்ற வரங்களை அடைந்து
தேவனுக்குப் பணிசெய்ய யெகோவாவாகிய
திரியேக பராபரன் கிருபைசெய்வாராக.

## ௱௰௩. சங்கீதம்.

அல்லேலூயா-பராபரனுடைய பணிவிடைகாரரே, துதிசெய்யுங்கள். பராபரனுடைய நாமத்தைத் துதியுங்கள். பராபரனுடைய நாமம் இது முதற்கொண்டு என்றென்றைக்கும் வாழ்த்தப்படக் கடவது. சூரியோதயந் துடங்கி அதின் அஸ்தம் பரியந்தம் பராபரனுடைய நாமந் துதிக்கப்படக்கடவது. சருவ தேசத்தாருக்கும் மேலாகப் பராபரன் அதிபதியாய் இருக்கிறார். அவருடைய மகிமை வானங்களுக்கு மேலாய் இருக்கின்றது. வானத்திலும் பூமியிலும் உள்ளவைகளைப் பார்க்கத் தாமே தாழ்ந்து, உன்னத ஸ்தலங்களில் வாசம்பண்ணுகிற நம்முடைய தேவனாகிய யேகோவாவுக் கொப்பானவன் யாவன்! இழிஞனைப் புழுதியில் இருந்து தூக்கியெடுத்து எழியவனைக் குப்பையில் இருந்து உயர்த்தி, தன் சொந்தச் சனத்தின் பிரபுக்களுடனேயும் உளுக்காரப் பண்ணுகிறார். மலடியாய் இருந்தவள் தன் வீட்டிலே சந்தோஷித்துடனே பிள்ளைகளுக்கு மாதாவாய் இருக்கச் செய்கிறார். அல்லேலூயா.

முற்றிற்று.